## வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்
## இலங்கை மத்திய வங்கி

### 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழான 2020ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கப் பணிப்புரை

**பிரயாண நோக்கத்திற்காக வெளிநாட்டு நாணயத் தாள்களை விடுவித்தல் மீது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு வழங்கப்படும் பணிப்புரைகள்**

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் நியதிகளுக்கமைய 2017.11.20ஆம் திகதியன்று அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு வழங்கப்பட்ட நடைமுறை கொடுக்கல்வாங்கல்கள் மீதான 2017இன் 01ஆம் இலக்கப் பணிப்புரைக்கான அட்டவணை IIஇன் 3.1.1.ஆம் பந்தி, 2020.03.19ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் இத்தால் நீக்கப்பட்டு பின்வருவன மூலம் பதிலீடு செய்யப்படுகின்றது என அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

3.1.1. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், ஏதேனும் நோக்கத்திற்காக (பிரயாணம், வர்த்தகம், பயிற்சி, வெளிநாட்டு மருத்துவ சிகிச்சை போன்றன உள்ளடங்கலாக) வெளிநாட்டிற்குப் பயணிக்கின்ற இலங்கையில் வதிகின்ற எவரேனும் ஆட்களுக்கு, அத்தகைய ஆள் இலங்கைப் பிரசையொருவராக இருக்கின்றவிடத்து கடவுச் சீட்டு மீது மேற்கொள்ளப்பட்ட பொருத்தமான புறக்குறிப்பீடொன்றுடன் ஐ.அ.டொ.5,000 (அல்லது வேறு வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமனான) உயர்ந்தபட்ச தொகைக்குட்பட்டு வெளிநாட்டு நாணயத் தாள்களை பிரயாணக் கொடுப்பனவாக வழங்குதல் வேண்டும்.

**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**2020 மாச்சு 19**